**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG20 – நிலை II – (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2020**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. மூன்றுறையரையனார் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்?
2. தாரகாசுரனின் மூன்று புதல்வர்கள் யாவர்?
3. அபிராமிப்பட்டரின் இயற்பெயர் யாது?
4. தமிழுலகம் சுரதாவை எப்படி அழைக்கின்றது?
5. செவிவழி வரும் பாடல்களை எவ்வாறு அழைப்பர்?
6. பெருமாள் திருமொழி பாடியவர் யார்?
7. மலைக் கோட்டைத் தொடர்வண்டி எந்த இரு இடங்களை இணைக்கிறது?
8. 'விளக்கு முறிந்தது' இது எந்த ஆகுபெயருக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது?
9. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' இதில் எத்தனை சீர்கள் அமைந்துள்ளன?
10. புறத்திணை எத்தனை வகைப்படும்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. கண்ணதாசன் எழுதிய இலக்கியங்கள் சிலவற்றை குறிப்பிடுக.
2. 'குடிபிறப்பு' என்ற நாலடியார் பாடலின் கருத்தை வரைக.
3. மனுநீதி சோழனின் சிறப்பை விவரிக்கவும்.
4. 'முரசு' என்ற பாரதியார் பாடலின் மையக்கருத்து யாது?
5. அமுத பாரதியின் 'புல்லாங்குழல்' என்ற புதுக்கவிதையின் கருத்தை எழுதுக.
6. ஏழடிப்பட்டம் என்பது யாது?
7. 'தமிழக' அரசால் செயலாக்கப் பெற்ற பெரியாரின் கொள்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
8. புதுக்கோட்டை 'வரலாற்று நினைவுச்சின்னங்களின் தீவு' என அழைக்கப்பெறுவதன் காரணம் என்ன?

9. இராமேஸ்வரத்திற்குத் தொடர் வண்டியில் செல்லும் போது நிகழும் உலக அதிசயம் யாது?
10. பாரி என்பவர் யார்? அவரது பெயர் காரணத்தை விவரிக்கவும்.
11. வள்ளலார் பிறந்த ஊர் மற்றும் அவரது பெற்றோர் பற்றி குறிப்பிடுக.
12. பாம்பின் கால் பாம்பறியும் என்ற பழமொழி எதற்கு உவமையாக கூறப்பட்டுள்ளது?
13. அபிராமி அம்மையினை நினையாதவர் அடையும் துயரம் யாது?
14. திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்கு எப்படி மாறினார்?
15. முகமது நபியின் முக்கிய நெறி யாது?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. 'அந்தாதி' – விளக்குக. அபிராமி அந்தாதி பற்றி சிறு குறிப்பு வரைக.
2. உலக வாழ்க்கையின் இயல்பை நாவுக்கரசர் எவ்வாறு உருவகிக்கிறார்?
3. 'ஒட்டக்கூத்தர்'–பெயர்க்காரணங்கள் இரண்டினை எழுதுக.
4. சிறந்த மலராக எதனை அமைச்சர் நலம்விரும்பி குறிப்பிட்டார்? எதனால்?
5. அல்வாவைக் குறித்து திரு. வி. க. அவர்கள் கூறுவது யாது?
6. குற்றாலக் குறவஞ்சி எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை யாவை?
7. பின்வரும் அணிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக?
   1.) பிறிது மொழிதல் அணி 2.) தற்குறிப்பேற்ற அணி
8. ஐவகை நிலங்களின் தன்மை மற்றும் அவற்றின் பெயர்கள் ஆகியவற்றைப் பட்டியலிடுக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. சித்தன்னவாசல் குகைக் கோயிலின் வெளிப்பக்கத் தூண்கள் இரண்டினில் உள்ள ஓவியங்களை விவரிக்க.
2. மூவருலாவின் ஆசிரியர் ஒட்டக்கூத்தரைப் பற்றிக் குறிப்பு வரைக.
3. வேற்றுமைப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. நாட்டுக்கொடி தன் வரலாற்றை எங்ஙனம் கூறுகிறது?
2. 'கல்வி' மற்றும் 'அறிவுடைமை' பற்றி நும் பாடப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறள்களின் கருத்துக்களை விவரிக்கவும்.